*KALAM – International Research Journal*
*Faculty of Arts and Culture,*
*South Eastern University of Sri Lanka.*
*12 (1), 2019*

# புறமெய்மைச் சிந்தனையில் சமூகத்தைக் கட்டியெழுப்புதலும் அதிலிருந்து விலகுதலும்: ஒகஸ்ட் கொம்டேயின் கருத்துக்கள் குறித்த விமர்சனப் பார்வை

**எஸ்.எம்.அய்யூப்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சமூகவியல் துறை
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
Correspondence: ayoobsm2004@gmail.com

**கட்டுரைச் சுருக்கம்**

*சமூக விஞ்ஞானங்களில் உள்ள கற்கைகளுள் சமூகவியல் இளையது. சமூகவியலின் ஆய்வுப் பொருளாக சமூகமே காணப்படுவதால் சமூக வாழ்வின் பெரும்பாலான கூறுகளில் சமூகவியல் நுழைந்து சமூகம் குறித்த தேடல்களைச் செய்கின்றது. சமூகத்தை விஞ்ஞான அத்திவாரத்தில் கட்டியெழுப்ப முனைந்த ஒகஸ்ட் கொம்டேயின் சமூகவியல் பங்களிப்புக் குறித்து இவ்வாய்வுக் கட்டுரை கலந்துரையாடுகின்றது. இரண்டாந்தர தரவுகளை மாத்திரம் மையமாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. கணிதவியலாளரான கொம்டேயின் சிந்தனைப் பரப்பில் மாற்றத்தை ஏற்படுத்திய பின் புலங்கள், சிந்தனையாளர்கள், சூழ்நிலைகள் இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் இயற்கை விஞ்ஞானத்தில் கையாளப்பட்ட முறைகளை சமூக விஞ்ஞானத்திலும் பயன்படுத்த முடியும் எனக் கண்ட கொம்டேயின் புறமெய்மை வாதம் தொடர்பாகவும் கொம்டே விஞ்ஞான அடிப்படைகளிலிருந்து விலகி வெளியிட்டதாக குறிப்பிடப்படும் அவரது மானிடத்தின் சமயம் குறித்த கருத்துகளும் இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளன.*

**பிரதான சொற்கள்:** புறமெய்மை வாதம், விஞ்ஞானத்தின் தரவரிசை, மானிடத்தின் சமயம்

## 1. அறிமுகம்

ஒகஸ்ட் கொம்டே *(1798 – 1857)* பிரான்ஸ் நாட்டுச் சிறந்த சிந்தனையாளராகவும், சமூக தத்துவவாதியாகவும், முதலாவது சமூகவியலாளராகவும் புலமை மரபில் கொள்ளப்படுகின்றார். சமூகவியல் கற்கைப் புலத்திற்கான முதல் அடிப்படையை இட்டவராக பெரும்பாலான அறிஞர்களால் இவரே கொள்ளப்படுவதால் சமூகவியலின் தந்தை எனும் தமதாக்கிக் கொள்கின்றார். சமூகத்தின் விஞ்ஞானமான சமூகவியல், ஏனைய விஞ்ஞானங்களுக்கு ஒப்பாக கருதப்பட வேண்டும் என்பதற்காக மும்முரமான உழைப்பில் ஈடுபட்டார். இவரது இந்த முன்னோடிப் பணிக்காக சமூகவியல் சமூகம் மகத்தான கௌரவத்தை தொடர்ந்தும் வழங்கிக் கொண்டிருக்கின்றது. பிரஞ்சுப் புரட்சி நடந்து முடிந்து பத்தாண்டுக்குப் பின் *1798* இல் பிரான்ஸ் நாட்டில் ஒரு சமயச் சார்புள்ள குடும்பத்தில் கொம்டே பிறந்தார். ஆரம்பத்திலேயே அபாரமிக்க ஆற்றல் கொண்டவராகவும் அதிகாரத்தை எதிர்ப்பவராகவும் மற்றும் அறிவுத்தீட்சண்யமிக்கவராகவும் (Brilliant) காணப்பட்டார்.

அபாரமான மனன சக்தியும், வாசிப்பின் மீது பேரார்வமும் இயல்பாக இவருக்கு காணப்பட்டதனால் பாடசாலைப் பருவத்திலேயே மாணவர்கள் அவரை 'தத்துவஞானி' என்று அழைத்தார்கள் (ராஜ சங்கர், *2007*). ஆரம்பக் கல்வியின் பின் தனது *16* வயதில் பிரபல்யமான ஈகோல் பொலிடெக்னிக் (Ecole Polytechnique) கல்வி நிலையத்தில் சேர்ந்து கொண்டார். அதிகாரத்தின் மீது வெறுப்புக் கொண்டவராகவும், பணிய மறுப்பவராகவும் (Recalcitrant), அதிகார

வர்க்கத்திற்கெதிராக குரல் கொடுப்பவராகவும் இவர் காணப்பட்டார். கொம்டே பிரகாசமான ஒரு மாணவனாக இருந்த போதும் அவரால் கல்லூரிப் பட்டப்படிப்பை கூட பெற முடியாதளவு அவரது போராட்ட வாழ்வு காணப்பட்டது. இது அவரது வாழ்வில் பல எதிர்மறை நிலைகளை பின்னாளில் தோற்றுவித்தது.

ஹென்றி டெ செயின்ட் சைமன் (Hanri De Saint Simon, 1760 – 1825) உடனான நெருக்கம் கொம்டேயின் வாழ்நாளில் மிக முக்கியமான திருப்பு முனையாகும். 1818 இல் தத்துவவியலாளர் செயின்ட் சைமனின் செயலாளராக சேர்ந்து கொண்ட இவர் நாளடைவில் சக பணியாளராக, சக சிந்தனையாளராக சைமனுடன் கைகோர்த்தார். இருவரும் இணைந்து 'சமூக மறுசீரமைப்பிற்கு அவசியமான விஞ்ஞான செயல்பாடுகள் தொடர்பான திட்டம்' (The Plan of the Scientific Operations Necessary for the Reorganization of Society) எனும் நூலை 1822 இல் வெளியிட்டார்கள். எனினும் இவர்கள் உறவு நீண்ட நாள் நிலைக்கவில்லை. செயின் சைமன் தனது பங்களிப்பிற்கான தகுந்த சன்மானத்தை கொடுக்கவில்லை என்பதே கொம்டேயின் பிரிவுக்கான காரணமாக அமைந்தது (ராஜ சங்கர், 2007). 1825 இல் திருமண பந்தத்தில் இணைந்த கொம்டே 1842 இல் அதாவது 17 வருட இல்லற வாழ்வின் பின் தனது மனைவி கரோலின் மசினால் (Caroline Massin) கைவிடப்பட்டார். இந்நிகழ்வும் அவரது தனிப்பட்ட வாழ்வில் ஏற்பட்ட துயரங்களும், பொருளாதார நெருக்கடிகளும் அந்நியமான ஒரு வாழ்வை நோக்கி கொம்டேயை தள்ளிவிட்டன. பிரான்ஸில் ஓடும் செய்ன் நதியில் குதித்து தற்கொலை செய்து கொள்ளக் கூட கொம்டே முயன்றார்.

கொம்டே 1830 முதல் 1842 வரை ஆற்றிய விரிவுரைகள் மொத்தமாக 4800 பக்கங்களில் தொகுக்கப்பட்டு ஆறு தொகுதிகளாக புறமெய்மை தத்துவம் (Positive Philosophy) எனும் பெயரில் வெளியாயின இந்த ஆய்வு நூல் பெரும் புகழை பிரான்ஸுக்கு வெளியேயும் கொம்டேக்கு தேடிக் கொடுத்தது. மிகப் பிரபல்யமான தத்துவவியலாளர் ஜே. எஸ். மில் கூட இந்நூலால் கவரப்பட்டார். 1826 இல் வாழ்க்கைத் தத்துவம் குறித்து தொடராக 72 விரிவுரைகளை கொம்டே ஆற்ற முனைந்தும் அவரது நரம்பு சீர்குலைவு (Nervous Breakdown) காரணமாக மூன்று விரிவுரைகளோடு நிறுத்தப்பட்டது. 1851 இல் கொம்டே நான்கு தொகுதிகள் கொண்ட 'புறமெய்மை அரசியல் அமைப்பு' (System of Positive Politics) எனும் நூலை பூரணப்படுத்தினார். சமூகத்தை மீள ஒழுங்கமைப்பதற்கான பாரிய திட்டமிடல் தொடர்பாக இந்நூல் முன்மொழிகின்றது. சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பதில் கோட்பாட்டுச் சமூகவியலின் முடிவுகளை எவ்வாறு பிரயோகிக்கலாம் என கொம்டே புதியதொரு முயற்சியை இந்நூலில் செய்து பார்க்கின்றார்.

அழுத்தம், சிரமம், முரண்பாடு, சர்ச்சை, வறுமை, தனிமை போன்றவற்றில் விழுந்து துயரப்பட்ட கொம்டேயின் வாழ்வு 05.09.1857 இல் முடிந்து போனது. வயிற்றுப்புற்றுநோயால் (Stomach Cancer) இறந்து போனார். தனது அந்திம காலத்தில் கொம்டேயினால் தோற்றுவிக்கப்பட்ட மானுடத்தின் சமயம் அவரின் மரணத்துடன் மரித்துப்போனது. ஆனால் அவர் தோற்றுவித்த விஞ்ஞானம் எனும் மரம் பரந்து வளரத் தொடங்கியது.

## 2. ஆய்வு நோக்கம்

சமூகம், விஞ்ஞான அடிப்படைகள் மீது கட்டியெழுப்பப்பட வேண்டும் எனும் கொம்டெயின் ஆரம்ப காலச் சிந்தனையையும் பிற்காலத்தில் அவரால் வெளியிடப்பட்டு விஞ்ஞான அடிப்படையிலிருந்து விலகி நின்ற சிந்தனையாக துறை சார்ந்தோரால் விமர்சிக்கப்படும் மானிடத்தின் சமயம் குறித்த கருத்துகளையும் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## 3. ஆய்வுப் பிரச்சினை

புறமெய்மைச் சிந்தனைகளை வளர்த்து விஞ்ஞான வழி சிந்திக்கும் மற்றும் செயல்படும் சமூகமொன்றை உருவாக்குவதே கொம்டேயின் வாழ்நாள் பணியாக இருந்தது. அதற்கான அடிப்படைகளை பௌதீக விஞ்ஞான முறைகளிலிருந்து பெற்றுக் கொண்டார். விஞ்ஞான அறிவு மட்டுமே உண்மையான அறிவு என்றும் அதனை நோக்கி சமூகத்தை நகர்த்துவதற்கான மூல உபாயங்களையும் வகுத்திருந்தார். எனினும் அவருடைய வாழ்நாளின் இறுதிக் காலத்தில் விஞ்ஞான அடிப்படைகளை விடுத்து சமய அடிப்படையிலான சமூகமொன்றை கட்டியெழுப்பும் முயற்சியில் இறங்கினார். ஒன்றுக்கொன்று முரணான இந்த சிந்தனைப் போக்கே ஆய்வுப் பிரச்சினையாக கொள்ளப்படுகின்றன. விஞ்ஞான அடிப்படைகள் மீது சமூகம் கட்டியெழுப்பப்பட வேண்டும் எனக் கருதிய கொம்டே ஏன் சமய அடிப்படைகளிலிருந்து சிந்திக்கலானார் என்பது மிக முக்கியமானதொரு தளமாற்றமும் பிரச்சினையுமாகும்.

## 4. ஆய்வின் முக்கியம்

கொம்டேயின் புறமெய்மைவாதம் தொடர்பான கருத்துகள் பல்வேறு துறைசார் அறிஞர்களின் சிந்தனைப் புலங்களில் பல்வேறுபட்ட தாக்கங்களையும் அதிர்வுகளையும் ஏற்படுத்தியிருப்பதனை அவ்வறிஞர்களை ஆய்வு செய்கின்ற போது தெரியவருகின்றன. கொம்டேயின் விஞ்ஞான அடிப்படைகள் மீது எழுந்த புறமெய்மைச் சிந்தனையும், அவரது அந்திம காலத்தில் பல்வேறுபட்ட நெருக்கடிகளின் நிமித்தம் தோற்றுவிக்கப்பட்ட மானிடத்தின் சமயம் குறித்த சிந்தனைகளும் இரு வேறுபட்ட முகம்களாகும். இரு வேறுபட்ட சிந்தனைகளின் பின்புலங்கள் குறித்த புரிதல்கள் சமூகவியல் தொடர்பான தேடல் கொண்டவர்களுக்கு சிந்தனைக் குழப்பங்களிலிருந்து விலகுவதற்கு தேவைப்படும் புத்திஜீவித்துவப் பின்னணிகளாகும்.

## 5. ஆய்வு முறையியல்

இரண்டாம் நிலை மூலாதாரங்களிலிருந்து தரவுகளைப் பெற்றே இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்படுகின்றது. இக்கட்டுரை விபரண ரீதியான பகுப்பாய்வை செய்வதோடு தேவைப்படும் இடங்களில் விமர்சன ரீதியான போக்கையும் கைக்கொள்கின்றது.

## 6. பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்

### *6.1* புறமெய்மைவாதம் (Psitivism)

இரசாயனவியல், உயிரியல் போன்ற இயற்கை விஞ்ஞானங்களில் பயன்படுத்தப்பட்ட கோட்பாடுகளையும் உத்திகளையும் பயன்படுத்தி சமூகத்திற்கானதொரு விஞ்ஞானத்தையும், கோட்பாட்டையும் வெற்றிகரமாக உருவாக்க முடியும் என சமூகவியல் நிறுவனர்கள் பலர் உறுதியாக நம்பியதன் விளைவே புறமெய்மைவாதத்தின் தோற்றமாகும். மறுவார்த்தையில் கூறின், இயற்கை விஞ்ஞானத்தின் முறையியல்களை சமூகவியலில் பிரயோகிக்க எடுத்துக் கொண்ட எத்தனங்களே புறமெய்மைவாதம் என அழைக்கப்படுகின்றது.

சமூகவியல் எனும் சொல்லையும், சமூகவியல் கற்கையையும் உருவாக்கியவரான ஒகஸ்ட் கொம்டே, இயற்கை விஞ்ஞானங்களின் முறைகள் மற்றும் அனுமானங்களை பிரயோகிப்பதன் மூலம் சமூகத்துக்கான புறமெய்மை விஞ்ஞானத்தை (Positive science of Society) உருவாக்க முடியும் என உறுதியாக நம்பினார். இயற்கை விஞ்ஞானங்களில் சடப்பொருட்களின் நடத்தையானது மாறாதவையாக இருப்பதைப் போல மனித நடத்தையும் காரணம் மற்றும் விளைவு கொள்கையால் (Principles of cause and effect) ஆளப்படுகின்றது எனவும் இதனை அடிப்படையாயக் கொண்டு

சடப்பொருட்களின் நடத்தையைப் போலவே மனிதர்களின் நடத்தையையும் புறவயமாக (Objectivly) அளக்க முடியும் என கொம்டே நம்புகின்றார். சடப்பொருட்களின் நடத்தையானது நிறை (Weight), வெப்பநிலை (Temperature) மற்றும் அழுத்தம் (Pressure) போன்றவற்றால் அளக்கப்படுவதைப் போல மனித நடத்தையை அளக்கவும், புறவயமான அளவீடுகளைப் பாவிக்கவும் முடியும் என கொம்டே மேலும் நம்புகின்றார்.

ஒரு குறப்பிட்ட இரசாயணப் பொருள் வெப்பத்திற்கு எத்தகைய துலங்கலைக் காட்டுகின்றது என்பதனை அளப்பதற்கு வெப்பநிலை, நிறை போன்றவற்றின் சரியான அளவீடுகளை வழங்குவது அவசியமாகும். இத்தகைய சரியான அளவீடுகளின் துணை மூலம் சடப்பொருட்களின் நடத்தையை துல்லியமாக அளக்க முடிவதோடு காரணம் - விளைவு தொடர்பான அறிக்கையை (Statement of Cause and Effect) வெளியிடவும் முடியும். இந்த அறிக்கையானது A×B=C என அமைய முடியும். இங்கு A என்பது சடப்பொருட்களின் அளவையும், B என்பது வெப்பத்தின் அளவையும், C என்பது வாயுவின் அளவையும் குறித்து நிற்கின்றது. இந்த சூத்திரத்தைப் பயன்படுத்தி சடப்பொருட்களின் நடத்தையை எந்நிலையிலும் அளவீடு செய்ய முடியும் என கொம்டேயின் புறமெய்மைவாத அணுகுமுறை குறிப்பிடுகின்றது (ஹரலம்பொஸ் மற்றும் ஹொல்போர்ன், 2000).

இத்தகைய முறைகளும், அனுமானங்களும் மனித நடத்தையை அளவீடு செய்வதற்கு பிரயோகிக்கப்பட முடியும் என்பதாக புறமெய்மை வாதிகளின் பார்வை அமைகின்றது. புறவயமான அளவீடுகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தைகளை அவதானிப்பதன் மூலம் காரணம் - விளைவு தொடர்பாக கருத்துகளை கூற முடியும் என இக்கோட்பாடு கூறுகின்றது.

நேரடியாக அவதானிக்க முடியுமான நடத்தையின் மீது புறமெய்மை வாத அணுகுமுறை தனது கவனத்தைச் செலுத்துகின்றது. நேரடியாக அவதானிக்க முடியாத காரணிகளான அர்த்தங்கள் (Meanings), உணர்வுகள் (Feelings) நோக்கங்கள் போன்றவை முக்கியமற்றவை என புறமெய்மை வாத அணுகுமுறை வாதிப்பதோடு அவை பிழையான திசையை நோக்கி இட்டுச் செல்லும் எனவும் கூறுகின்றது. சமூகத்தில் உள்ள பெரும்பாலான கட்டிளமைப் பருவத்தினர் திருமண பந்தத்தில் இணைந்து குழந்தைகளை உருவாக்கிக் கொள்கின்றார்கள் என எடுத்துக் கொண்டால் இவ்வுண்மை தகுந்த தரவுகள் வாயிலாக அவதானிக்கப்படவும் முடியும், அளவீடு செய்யப்படவும் முடியும். ஆனால் திருமணம் மற்றும் இனப்பெருக்கம் தொடர்பாக சமூக உறுப்பினர்கள் கொடுக்கும் அர்த்தங்கள் வழி ஆராயத் தொடங்கினால் அவ்வர்த்தங்கள் நேரடியாக அவதானிக்கப்பட முடியாதவை. அவற்றை சரியாக அளவீடு செய்ய முனைந்தாலும் நடத்தைக்கான உண்மைக் காரணத்தை கண்டறிவதிலிருந்து அவை கவனத்தை திசை திருப்பி விடும். இளைஞர்கள் தனிமை காரணமாகவே திருமணம் முடிக்கின்றார்கள் என எண்ணலாம். மற்றுமொருவர் காதல் காரணமாக எனவும் கருதலாம். இன்னுமொருவர் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே திருமணம் முடிக்கின்றார் எனவும் நம்பலாம். விளக்கத்திற்காக இவ்வகை தரவுகளில் தங்கயிருப்பது திருமணத்திற்கான காரணங்களை தனிநபர்கள் தெரிந்து வைத்திருக்கின்றார்கள் என எண்ண வைக்கின்றது. இது அவர்களது நடத்தைக்கான உண்மையான காரணத்தை கண்டறிவதிலிருந்தும் தெளிவற்ற நிலையை தோற்றுவிக்கின்றது என புறமெய்மைக் கோட்பாடு கூறுகின்றது.

சடப்பொருட்களின் நடத்தையைப் போலவே மனித நடத்தையையும் விளக்க முடியும் எனும் எடுகோளினை அடிப்படையாகக் கொண்டே புறமெய்மை வாதிகள் அவதானிக்கப்படக் கூடிய உண்மைகளுக்கு (Observable Facts) அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். இயற்கை விஞ்ஞானங்கள் சடப்பொருட்கள் கொடுக்கும் அர்த்தங்களையும் நோக்கங்களையும் பார்ப்பதில்லை. அணுக்கள் (Atoms) மற்றும் மூலக்கூறுகள் (Molecules) அர்த்தங்களின் அடிப்படையில் செயல்படுவதில்லை. மாறாக அவை வெளித் தூண்டுதலுக்கு துலங்களைக் காட்டுகின்றன.

வெப்பத்தை ஒரு வெளித் தூண்டியாக எடுத்து அதனை ஒரு சடப்பொருள் மீது பிரயோகித்தால் அச்சடப்பொருள் வெப்பத்துக்கான துலங்கலைக் (சுநயஉவழைெ) காட்டும். இங்கு இயற்கை விஞ்ஞானங்களின் பணி, அவதானிப்பது, அளப்பது, பின் துலங்கலை விளக்குவது என்பதாகவே அமைகின்றன.

மனித நடத்தை தொடர்பாக இதே தர்க்கத்தையே புறமெய்மைவாத அணுகுமுறை பிரயோகிக்க முயல்கின்றது. மானிடர்கள் வெளித்தூண்டிக்கு துலங்கலைக் காட்டுகின்றார்கள். துலங்கலை அடிப்படையாகக் கொண்டு இவர்களது நடத்தைகள் விளக்கப்பட முடியும். மக்கள் திருமண பந்தத்துக்குள் நுழைந்து சமூகத்தின் கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் விதமாக குழந்தைகளை உருவாக்குகின்றார்கள் என எடுத்துக் கொண்டால் சமூகம் தனது நிலையான இருப்பிற்காக இத்தகைய நடத்தைகளை வேண்டுகின்றது. அதேபோல் சமூக உறுப்பினர்களும் இந்த வேண்டுகோளுக்கு இலகுவாக பதிலளிக்கின்றார்கள். இந்த நடத்தைக்கு அவர்கள் கொடுக்கும் அர்த்தங்களும் நோக்கங்களும் பெரும்பாலும் முக்கியமற்றவை.

மாக்சியவாதம் புறமெய்மைவாத அணுகுமுறையை பின்பற்றுவதாக சில பொழுதுகளில் வாதிக்கப்படுகின்றது. பொருளியல் அடிக்கட்டுமான (Economic Infrastructure) தூண்டிக்கான துலங்கலாக மனித நடத்தை கொள்ளப்படுகின்றது. இதே பார்வையில் தொழிற்பாட்டு முன்நிபந்தனைக்கான துலங்கலாக (Response) சமூக உறுப்பினர்களின் நடத்தை கருதப்படுகின்றது.

புறமெய்மை வாதத்தின் (Positivism) நிறுவனர் பிரஞ்சு தத்துவஞானி ஒகஸ்ட் கொம்டே என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. புறமெய்மை வாதம் என்பது விஞ்ஞானத்தின் தத்துவம் (Philosophy of science) என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. அறிவானது புலன்வழி அனுபவத்தை அடிப்படையாக கொண்டு அமைய வேண்டும் எனும் (Empiricist Tradition) சிந்தனையிலிருந்து புறமெய்மை வாதம் எழுகின்றது. இது பௌதீக ஊகங்களை நிராகரித்து, முறையான அவதானம் மற்றும் பரசோதனை (Systematic observation and experiment) போன்றவற்றின் அடிப்படையில் எழும் புறமெய்மை அறிவுக்கு (Positive knowledge) ஆதரவாக பேசுகின்றது. கொம்டே புறமெய்மை வாதத்தின் நிறுவனராக கொள்ளப்பட்டாலும் டேவிட் ஹியூம் (David Hume) மற்றும் புனித சைமன் போன்றோரின் எழுத்துக்களின் தாக்கங்கள் அவரில் காணப்படுவதை புரிந்து கொள்ளலாம்.

கொம்டேயின் பார்வையில் இரு தனித்துவமான வழிகளில் நேர்மறை வாதம் பார்க்கப்படுவதாக ராஜ சங்கர், (2007) விளக்குகிறார்.

### *6.2* ஒரு கோட்பாடாக நேர்மறைவாதம் (Positivism as a doctrin)

உண்மையான அறிவு என்பது விஞ்ஞான அறிவு மட்டும்தான் என்பதே கொம்டே வகுத்த கோட்பாடாகும். சமூக வாழ்க்கையை அவதானித்து அது எவ்வாறு தொழிற்படுகின்றது என்பது தொடர்பான நம்பகரமான மற்றும் சரியான அறிவை ஏற்படுத்துவது சாத்தியம் எனும் எடுகோளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு சிந்திக்கும் வழிமுறைதான் (Way of thinking) புறமெய்மை வாதமாகும்.

புலன்வழி அனுபவம் (Sensory experience) மூலம் மட்டுமே அறிவானது பெறப்பட முடியும் என்பது கொம்டேயின் தத்துவ நிலைப்பாடாகும். இதன்படி, பௌதக அதீத ஊகம் (Metaphysical speculation), அகவயம் சார்ந்த அல்லது உள்ளுணர்வுகள் (Subjective or Intuitive Insight) முற்றிலும் தர்க்க ரீதியான பகுப்பாய்வு (Purely Logical Analysis) போன்ற வழிகளில் கிடைக்கும் அறிவு, உண்மையான அறிவு வட்டத்துக்கு வெளியே உள்ளதாக கூறி நிராகரிக்கப்படுகின்றன. பௌதீக

விஞ்ஞானத்தில் பயன்படுத்தப்படும் முறைகள் மட்டுமே அறிவைப் பெறுவதற்கான ஒரே துல்லியமான வழிகளாக கொள்ளப்படுகின்றன. எனவே, சமூக விஞ்ஞானங்களும் இம்முறைகளைப் பயன்படுத்தவும் மாதிரியாக கொள்ளவும் வேண்டும்.

### 6.3 ஒரு முறையாக புறமெய்மை வாதம் (Positivism as a method)

பௌதீக விஞ்ஞான முறைகள் (உதாரணம்: அளத்தல், பொதுவிதியைக் காணுதல்) சமூக விஞ்ஞானங்களுக்குள்ளும் கொண்டு செல்லப்பட என முடியும் புறமெய்மை வாதம் குறிப்பிடுகின்றது. அதாவது புறமெய்மை வாதம் விஞ்ஞான முறையின் பயன்பாட்டை (Use of scientific method) வேண்டி நிற்கின்றது. சமூகத்தையும் அதன் மாற்றங்களையும் புரிந்து கொள்வதற்கு விஞ்ஞான முறைகளின் பிரயோகத்தினையே (Applications) புறமெய்மை வாதம் எனும் கருத்தின் மூலம் கொம்டே நாடுகின்றார். (எனினும் இயற்கை விஞ்ஞானத்தோடு ஒப்பிடும் போது சமூகவியலானது குறைந்தளவிலான பரிசோதனை (Less experimental) தன்மை கொண்டது என்பதனையும் கொம்டே சுட்டிக் காட்டுகின்றார்).

சமூக வாழ்க்கையானது அடிப்படையான சட்டங்களாலும், கோட்பாடுகளாலும் நிர்வகிக்கப்படுகின்றன என்றும் அவை பௌதீக விஞ்ஞானங்களில் பயன்படுத்தப்படும் முறைகளைக் கொண்டு கண்டறியப்பட முடியும் என்றும் கொம்டே நம்பினார். கொம்டேயின் கோட்பாடு பல்வேறு அறிஞர்களால் குறிப்பாக ஜே. எஸ். மில் போன்றோரினால் சிறப்பாக போற்றப்பட்டது. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மிகவும் பிரசித்தி பெற்ற இயக்கமாக அது பிரபல்யமடைந்தது. எனினும் கொம்டேயின் அந்திம காலத்தில் புறமெய்மை வாதம் தொடர்பான கோட்பாடுகளில், குளோடில்ட் டி வோக்ஸ் (Clotilde de Vaux) எனும் பெண் காரணமாக சடுதியான மாற்றங்கள் தோன்றின.

### 6.4 விமர்சனங்கள்

01. புறமெய்மை வாதம் இன்றைய சமூகவியலில் அதன் செல்வாக்கை இழந்து விட்டது. அவதானிக்க முடியாத உள்ளார்ந்த விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மேம்போக்கான உண்மைகள் மீது கவனம் செலுத்துவதாக புறமெய்மை வாதத்தை அண்மைய பார்வைகள் சாடுகின்றன. மானிட ஊக்கிகள் (Human motives) அல்லது சமூக வாழ்வு மற்றும் நடத்தை தொடர்பாக மக்கள் கொண்டிருக்கும் அர்த்தங்கள் அவதானிக்கப்பட முடியாதவையாக இருந்த போதிலும் அர்த்தங்களும், ஊக்கிகளும் இல்லை என்பது பொருளன்று. உண்மையில் இயற்கை விஞ்ஞானங்களில் பயன்படுத்தப்படும் முறைகளை சமூக வாழ்வின் இயல்பை புரிந்து கொள்ள பயன்படுத்த முடியாது என பரவலாக வாதிக்கப்படுகின்றது.

02. பௌதீக விஞ்ஞானங்களுக்கும் சமூக விஞ்ஞானங்களுக்குமிடையே முறையியல் வேறுபாடு கூடக் காணப்படுகின்றது. இயற்கை விஞ்ஞானத்தின் முறையியல்களை சமூக விஞ்ஞானங்களில் பாவிக்க முனையும் போது பொருந்தாமை அங்கே தோற்றம் பெறுகின்றன. உணர்வு நிலை (Consciousness), பண்பாட்டு நியமங்கள், குறியீட்டு அர்த்தங்கள், எண்ணங்கள் போன்றவை தனித்துவமான மானிடப் பண்புகள். இவற்றை இயற்கை விஞ்ஞான முறைகளால் அளக்கவோ, பரிசோதிக்கவோ முடியாது.

03. சடப்பொருட்களைப் போலவே மனித நடத்தைகளும் மாறாத தன்மை கொண்டவை எனும் புறமெய்மைவாதத்தின் கருத்தை சமூகவியலாளர்கள் எதிர்க்கின்றார்கள். மனித நடத்தை காலம், இடம், சூழுலு் போன்றவற்றின் ஆதிக்கத்துக்குட்படக்கூடியவை என அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

எமில் துர்ஹைம் போன்ற சமூகவியலாளர்கள் மாற்றுக் கருத்தை தெரிவித்த போதும் காலநிலை மாற்றங்கள் தற்கொலையைக் கூட தூண்டிவிடும் என கருத்து தெரிவிக்கின்றார்கள். சடப்பொருட்களின் மாறாத தன்மைகளை கண்டறிவது இலகுவான விடயமாகும். ஆனால் மனித

நடத்தைகளும் சடப்பொருட்களைப் போலவே மாறாத தன்மை கொண்டவை எனக் கருதுவது பிழையான முடிவுகளை அடைந்து கொள்ள வழிவகுத்து விடும் என சமூகவியலாளர்கள் எச்சரிக்கின்றார்கள். மனிதனானவன் தனது குழந்தைகளும் இடைவினை கொள்ளும் போது வெளிப்படுத்தும் நடத்தைகள் வேறு, ஏனைய குழந்தைகளிடம் வெளிப்படுத்தும் நடத்தைகள் வேறு, மனைவியிடம் வெளிப்படுத்தும் நடத்தைகள் வேறு, ஏனைய பெண்களிடம் வெளிப்படுத்தும் நடத்தைகள் வேறு. எனவே மனித நடத்தைகளும் மாறாதவை எனக் கூறுவது மனித நடத்தை பற்றிய சரியான கூற்றாக கொள்ள முடியாது.கொம்டேயின் 'விஞ்ஞான அறிவு மட்டுமே உண்மையான அறிவாகும்' எனும் கூற்றும் புலன்வழி அனுபவம் மூலம் மட்டுமே அறிவு பெறப்பட வேண்டும் எனும் கூற்றும் கூட பல கூர்மையான விவாதங்களை சமயவியலாளர்களிடையே தோற்றுவித்திருக்கின்றன.

சமயங்களும் அதன் போதனைகளும் புலன்வழி அனுபவங்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவு இல்லை என்பது பொதுவான உண்மையாகும். சமயத்தின் போதனைகளும் காள் பொப்பரின் கோட்பாட்டிற்கிணங்க பொய்ப்பிக்கப்பட முடியாதவையும் கூட. இறைவன் தனது தூதர்கள் வழி இறக்கி வைக்கப்பட்ட அறக்கட்டளைகளே சமய நூற்களாகும். இவற்றை பௌதீக முறைகளில் பயன்படுத்தப்பட்ட உத்திகளைப் பயன்படுத்தி அவதானிப்பதோ, பரிசோதனை செய்வதோ, பொது விதிகளைக் கண்டறிவதோ சாத்தியமற்ற விடயங்களாகும். சமயங்கள் கூறும் சம்பவங்கள், நிகழ்வுகளில் பல கண்களால் பார்க்க முடியாதவை. ஜிப்ரில் எனும் வானவருக்கு 600 இறக்கைகள் உள்ளதாகவும் அவர் முஸ்லிம்களின் நோன்பின் இறுதிப் பகுதியில் இந்த பூமிக்கு வருவதாகவும் நம்புவது இஸ்லாமிய மரபு. இந்த நிகழ்வை கண்களால் பார்க்கவும் முடியாது. தொலைநோக்கியால் அவதானிக்கவும் முடியாது. கொம்டேயின் பார்வையில் இது அறிவு வரிசையில் சேராவிடினும் முஸ்லிம் மரபில் இது நம்பப்படுகின்றது.

### 6.5 மானிடத்தின் சமயம் (Religion of Humanity)

கொம்டேயின் மானிடத்தின் சமயம் அவரால் வழங்கப்பட்ட சமூக சிந்தனையின் ஒரு வடிவமாக கொள்ளப்பட்டாலும் சமூகவியல் புலத்தில் இதற்கான முக்கியத்துவம் குறைந்த அளவிலேயே கொடுக்கப்படுகின்றது. தனது வாழ்நாளின் ஆரம்பகாலத்தில் தனித்துவமான புத்திஜீவித்துவமிக்க புறமெய்மை சிந்தனையின் விருத்திக்காக உழைத்துவிட்டு தனது வாழ்வின் அந்திமபகுதியில் ஒழுக்கவியல் மற்றும் சமய சிந்தனைகள் குறித்து பேசியமை பல துறைசார் அறிஞர்களால் ஆச்சரியமிக்கதாகவும் அவரது சிந்தனையில் ஏற்பட்ட பின்னடைவாகவும் பார்க்கப்படுகின்றது. ஏனெனில் கொம்டேயினால் உருவாக்கப்பட்ட புறமெய்மைவாதமானது விஞ்ஞான விசாரனை செய்வதை வேராக கொண்டது. கொம்டே புதியதொரு சமயத்தை உருவாக்க முயன்று அதற்கு விஞ்ஞானிகளின் சமயம் அல்லது மானிடத்தின் சமயம் என பெயர் வைத்தார். விஞ்ஞான அடிப்படைகளின் மீது இந்த சமயத்தை அவர் கட்டியெழுப்ப முயன்றதாக கொம்டே கருதுகின்றார்.

விஞ்ஞானத்தின் காவலாளி மற்றும் புறமெய்மையின் தந்தை என அழைக்கப்பட்ட கொம்டே சமயத்தை பற்றி பேசத்தொடங்கியமை மாறுபட்ட ஒரு விடயமாக ஆய்வாளர்களால் நோக்கப்படுகின்றது. கடவுளை விடுத்து அறிவுத்தாகமே ஒரு விஞ்ஞானிக்கு இருக்க வேண்டும் என்று தனது இளமைக்காலத்தில் பேசிய கொம்டே. தனது வாழ்நாளில் எதிர்கொண்ட சொல்லொண்ணா துயரங்கங்களாலும் பல்வேறுபட்ட துன்பியல் சம்பவங்களாலும் சமயத்தின்பால் ஈர்க்கப்பட்டார். சொந்த மனைவியின் புறமொதுக்கம், குளோதில் டி வெக்ஸ் எனும் காதலியின் மரணம், கண்ணீரை துடைத்து சோகங்களை பகிர சொல்லிக்கொள்ளும்படியான நண்பர்களின் துணையின்மை போன்ற காரணங்கள் அவரை புதிய சிந்தனைகளை வாசிப்பதில் இருந்தும் புதிதாக சிந்திப்பதிலிருந்தும் தடுத்து விட்டன. வாழ்வில் ஏற்பட்ட இந்நிகழ்வுகள் அவரது சிந்தனை புலத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தின.

### 6.6 கொம்டேயின் மானுடத்தின் சமயம்: சில பண்புகள்

#### அ. கடவுள் இல்லாத சமயம்

கொம்டேயினுடைய சமயம் தெய்வீக சக்தியை விடுத்து ஒழுக்கத்தின் மீது கட்டியெழுப்பப்படுகின்றது. கடவுளானவர் மனிதனின் அறியாமையில் ஜீவிக்கின்றார். அறியாமை விலகும் போது கடவுளும் விலகிக் கொள்கின்றார் என கொம்டே கூறுகின்றார். வணக்க வழிபாடுகள் கடவுளுக்கு செய்யப்படாமல் மனித குலத்திற்கு செய்யப்படவேண்டும் என்பது கொம்டேயின் கருத்து. 'எங்களுக்கு சமயம் வேண்டும் கடவுள் வேண்டாம்' என்பது அவரது பிரபல்யமான வாசகமாகும்.

#### ஆ. சமூகவியலாளர்கள் - சமயப்போதகர்கள்

விஞ்ஞான கொள்கைகளை கொண்டு உருவாக்கப்பட்ட சமூகம் சமயத்தின் பால் தேவைகளை கொண்டு இருக்கின்றது எனும் கருத்தை கொம்டே கொண்டிருந்தார். சமூகவியலாளர்கள் சமயப்போதகர்கள் இந்த விஞ்ஞான சமய சமூகத்தை கட்டுப்படுத்துபவர்களாக காணப்படுவார்கள். இவர்கள் கடமைகளை செய்யும் படியும் தங்களது கட்டுப்பாடுகளை புரியும் படி மனித குலத்தை அழைப்பார்கள்.

#### இ. புதிய சமயமும், புதிய சகாப்தமும்

புதிய சமயத்தின் உயர் போதகராக தன்னை கருதிக் கொண்டார் கொம்டே. அச்சமயமானது அமைதிஇ நீதி நேர்மை சமத்துவம் போன்றவற்றை போதிக்கின்றது. இந்த புதிய பறமெய்மை சமயத்தில் அன்பேஇ அதன் கொள்கையாகவும் ஒழுங்கேஇ அதன் அடிப்படையாகவும் நிகழ்ச்சியேஇ அதன் இலக்காகவும் காணப்படுகின்றது. வரலாறு முழுவதும் இருந்துவரும் சுயநலம் நீங்கி அவ்விடத்தில் பொதுநலம் வந்து உட்கார்ந்து கொள்கின்றது. இச்சமயத்தில் அடுத்தவர்களுக்காக வாழும் வாழ்க்கை முற்படுத்தப்படுகின்றது. அன்பும்இ கருணையும் வாழ்வின் ஆதார சுருதியாக கொள்ளப்படுகின்றது. நாம் செயற்பட்டு மற்றும் சிந்தித்து களைப்படைந்துவிட்டோம். அன்பு காட்டி களைப்படைந்துவிட்டோமா எனக்கேட்டு மானிடத்தின் சமயம் அன்பை ஆதார சுருதியாக போதிக்கின்றது.

#### ஈ. அறநெறியை (Morality) மையப்படுத்திய சமயம்

தனது வாழ்நாளின் அந்திமகாலத்தில் தான் ஒரு சமூக விஞ்ஞானி என்பதனை மறந்து தன்னை ஒரு தீர்க்கதரிசியாகவும் புதிய சமயத்தின் தோற்றுவினராகவும் கருதிக் கொண்டார் கொம்டே. அவரால் உருவாக்கப்பட்ட சமயம் மனித சமூகம் எதிர்கொள்ளும் எல்லா சிக்கல்களில் இருந்தும் விடுதலை தருவதாகவும், முக்தியை வழங்குவதாகவும் கொம்டே நம்பினார். ஆகையால் தூய சமூக சமயத்தை உருவாக்குவதற்கு அவர் மும்முரமாக தொழிற்பட்டார்.

#### உ. பாரம்பரிய கிறிஸ்தவ சமயமும் கொம்டேயும்

கொம்டே கிறிஸ்தவ சமயத்திலே சமூக மேம்பாட்டுக்கான அம்சங்களை கண்டு கொள்ளாமையினால் சமூகம்சார் சமயம் ஒன்றை உருவாக்க முனைந்ததன் வெளிப்பாடே மானிடத்தின் சமயமாகும் என போகாடஸ் (டீழபயசனயள) குறிப்பிடுகின்றார்

### 6.7 சில விமர்சனங்கள்

கொம்டேயினது மானுடத்தின் சமயம் பல வகையில் பரவலாக விமர்சிக்கப்படுகின்றது. கிறிஸ்தவ புத்திஜீவித்துவவாதிகள் மானுடத்தின் சமயம் என்பது விஞ்ஞானத்தினதும் கிறிஸ்தவ மதத்தினதும்

கலவையே அன்றி வேறில்லை எனக் கூறுகின்றனர். இது ஒரு சமயமாக அல்லாமல் போதனைகளின் தொகுப்பாக காணப்படுகின்றது என வேறு சிலர் விமர்சிக்கின்றனர். ஜே.எஸ்.மில் (J.S.Mill) போன்றவர்கள் இவரது சமயம் சார் கருத்துக்கள் அவருக்கு ஏற்பட்ட உளநோய்களிலிருந்து பாதுகாப்பதற்கு பதிலாக மேலும் அவரை தனிமைப்படுத்துவதற்கும், அறிமுகமற்ற கருத்துக்களை வெளியிடுவதற்கும் இட்டுச்சென்று விட்டன எனக் கூறகின்றார். வேறு சிலர் இதனை சுயநலம் சார் சமயம் என விமர்சிக்கின்றனர். கோசர் போன்றோர் கொம்டேயின் சமயம் வரலாற்று ஆசிரியர்களுக்கு பிரயோசனம் கொடுக்குமே தவிர சமுகவியலாளர்களக்கு இதனால் எல்லைப்படுத்தப்பட்ட பிரயோசனமே உண்டு எனக் கூறுகின்றார்.

## 7. முடிவுரை

அகவயச் சிந்தனையிலிருந்து (Subjectivity) விலகி புறமயமாக (Objectivity) மற்றும் செயல்படும் சமூகம் ஒன்றை உருவாக்க முனைந்ததன் வெளிப்பாடே கொம்டேயின் புறமெய்மைவாதத்தின் தோற்றமாகும். கைத்தொழில் புரட்சியினாலும் அதனையொட்டி எழுந்த தோற்றப்பாடுகளாலும் அல்லோல கல்லோலப்பட்டிருந்த சமூகத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு விஞ்ஞானத்தின் அடிப்படையில் எழும் திட்டங்கள் கொம்டேயிக்கு தேவையாக இருந்த இச்சூழலிலேயே பௌதீக விஞ்ஞானங்களில் பயன்படுத்தப்பட்ட உத்திகளையும் முறைகளையும் சமூகத்திலும் சமூக விஞ்ஞானங்களிலும் பயன்படுத்த கொம்டே முனைந்தார். இதன்படி விஞ்ஞான அறிவு மட்டுமே உண்மையான அறிவு எனக் கண்டார். அதேபோல் புலன்வழி அனுபவங்களால் மட்டுமே அறிவு கிடைக்கப்பெற வேண்டும் எனக் கண்டார். இச்சிந்தனைகளுக்கு சாதகமாகவும் எதிராகவும் பல விமர்சனங்கள் புத்திஜீவித்துவ பரப்பில் தோன்றின.

விஞ்ஞான அடிப்படைகள் மீது சமூகம் கட்டியெழுப்பப்பட வேண்டும் எனக் கருதி அதற்கான பல்வேறு முஸ்தீபுகளில் ஈடுபட்ட கொம்டே தனது வாழ்நாளின் அந்திம பகுதியில் சமயம் குறித்து வெளிப்படுத்திய கருத்துக்கள் அவரது கருத்து நிலைக்கு மாற்றமான ஒரு நிலைப்பாடாகும் என துறைசார்ந்தோர் விமர்சிக்கின்றார்கள். விஞ்ஞான அடிப்படையில் உருவாக்கப்படும் சமூகத்துக்கு சமயத்தின்பால் தேவை இருப்பதாக கருதியே மானிடத்தின் சமயத்தை உருவாக்கியதாக கொம்டே கருதுகின்றார்.

கொம்டேயின் சமயம் குறித்த கருத்துகள் விஞ்ஞானத்திற்கு எதிரான நிலைப்பாடாக கொள்ளப்பட்டாலும் அதனை நியாயமாக காண்கின்ற சிந்தனையாளர்களும் காணப்படுகின்றார்கள். விஞ்ஞானத்தை மட்டும் மூலாதாரமாகக் கொண்டு கட்டமைக்கப்படும் சமூகங்கள் மனித நலனை மறந்து விஞ்ஞானம் எனும் பெயரில் சகல கைங்காரியங்களையும் செய்வதை அவதானிக்கலாம். ஆயுதங்கள், அணுகுண்டுகள் மானிட நலனை மறந்த விஞ்ஞான சமூகத்தின் ஆராய்ச்சிகள் இவைபோக போர்களும் அவை ஏற்படுத்திய அழிவுகள், படுகொலைகள், விதவைகள், ஊனப்பட்டவர்கள் போன்றவையும் விஞ்ஞான சமூகத்தின் பண்புகள். அளவுக்கு அதிகமான விஞ்ஞான அடிப்படைகள் ஆபத்தை விளைவிப்பதால் அன்பையும், சமாதானத்தையும் போதிக்கும் சமயம் குறித்த சிந்தனைகளும் விஞ்ஞான சமூகத்துக்கு போதிக்கப்பட வேண்டும் என்பது நடுநிலைச் சிந்தனையாளர்களது கருத்தாகும். இந்த அடிப்படையில் பார்க்கும் போது விஞ்ஞான அடிப்படைகளில் எழும் புறமெய்மைச் சமூகத்துக்கு சமயத்தின் போதனைகளும் தவிர்க்கப்பட முடியாதவை எனும் கருத்துக்கு வரலாம்.

**உசாத்துணை**

அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்.* ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்களைக்கழகம்

கிருஷ்ணமூர்த்தி, ஜெ. (2000). *சமூகவியல் கோட்பாடுகள்.* சென்னை. அண்ணாமலை பல்கலைக்கழகம்.

Anderson, N. & Schlunke, K. (2008). *Cultural theory in Everyday Practice*. Oxford: Oxford University Press.

Best, S. (2003). *A Beginner's Guide to Social Theory*. London: Sage Publication

Elliot, A. (2009). *Contemporary Social Theory: An Introduction*. London: Routledge.

Gells, Richard Levince, Ann, (1999). *Sociology: Introduction*. New York: McGraw Hill Inc.

Giddens Anthony. (2005). *Sociology.* Cambridge: Polity Press.

Haralambos and Holborn, (2000). *Sociology: Themes and Perspectives.* London: Harper Collins Publishers Limited.

Johnson, Harry, (1999). *Sociology: A Systematic Introduction.* New Delhi:. Aliede Publishers.

Rao Sankar, (2007). *Sociology*: *Primary Principles.* New Delhi: S.Chand and Commpany Ltd.

Harrington, A. (2005). *Modern Social Theory: An Introduction*. Oxford: Oxford Univ. Press.

Wingwood, A.S. (2000). *A Short Histry of Sociological Thoughts.*USA: McMillan Press.

Hadden, R.W. (1997). *Sociological Theory*.Gunada: Broadway Press.